V. 4. No 8

Aug 1937

3L

RE723m211, N28

N31·4·8

187157

Registered No. M. 3330. Vol. 4—No. 8.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு ஆவணித் திங்கள் 1931 ௵ ஆகஸ்டு௴ | இதழ் ௮ |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்


இணைக்கப்பெற்ற சைவ சபைகள் ... ... ௧௧௩

பூந்துருத்தி நம்பிகாட நம்பி ... ... ௧௧௫

சம்பந்தரும் இளவேனிலும் ... ... ௧௧௬

அன்பு நெறியும் சைவசித்தாந்தமும் ... ... ௧௧௭

திருஞானசம்பந்தர் திருமண நட்ப ஆராய்ச்சி ... ௨௦௪

திருநாவலூர் ... ... ... ௨௧௨



ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,

உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1931 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.

தனிப் பிரதி அணா 3.

# தேவாரம்—குறைந்த விலை

சைவசித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்ட அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம் ஆயிரம் பிரதிகள்வரையில் சமாஜக் காரியாலயத்தில் 1931ஷு ஜூலை 26உ ஞாயிற்றுக்கிழமை மாலை பகிரங்க ஏலத்தில் விற்று முதல் செய்யப்பட்டன. ஏலம் முடிந்தவுடன் சமாஜ நிர்வாகசபைக் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் ஏலத்தில் உயர்ந்தவிலை விகிதம் எவ்வளவிருந்ததோ அதே விகிதப்படி ஏலத்துக்கு வர இயலாத அங்கத்தினருக்குச் சில நாட்கள்வரை பிரதிகளைத் தந்து சௌகரியம் அளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் இதுமுதல் ஒருமாதம்வரையில் சமாஜ அங்கத்தினருக்குப் புத்தகங்கள் கீழ்வரும் விவரப்படி அனுப்பப்படும்.

| | |
|---|---|
| சுந்தரர் தேவாரம் 100 ராப்பர் பிரதிகள் | விலை ரூபா 16—0—0 |
| அப்பர் தேவாரம் 100 ராப்பர் பிரதிகள் | விலை ரூபா 40—0—0 |

சுந்தரர் தேவாரம் 100 பிரதிகளைப் பெட்டியில் வைத்து இரயில்வே பார்சல் (To Pay) மூலம் அனுப்பி இரயில்வே இரசீதை வாங்குவோர் தபால் விலாசத்துக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் அனுப்புவதற்குப் பிரத்தியேகச் செலவு ரூபாய் ஒன்று ஆகிறது. அவ்வாறே அப்பர் தேவாரம் நூறு பிரதிகளை அனுப்பும் செலவு ரூபாய் இரண்டாகும். எனவே, ஷை பிரதிகளைப் பெற விரும்புவோர் இன்றுமுதல் ஒரு மாதத்துக்குள் முன்பணமாக ரூபா 17 அல்லது ரூபா 42 அனுப்பினால் பணம் கிடைத்த மூன்று நாளைக்குள் அவர்கட்குப் புத்தகங்கள் மேற்கூறியபடி அனுப்பப்படும். மேற்கூறிய தேவாரப் பிரதிகள் இன்னும் சிலவே இருத்தலால் பின்னர் ஏமாற்றமடையாது இப்போதே விரைந்து பெற்றுக்கொள்வதே நலம்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>சென்னை. 10—8—1931

இங்ஙனம்:<br>ம. பாலசுப்ரஹ்மண்யம்,<br>காரியதரிசி.

## மதிப்புரைகள்

**மதுரகவிமாலை** :—ஆசிரியர் - மதுரகவி - பு. நடராஜ உபாத்தியாயர் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், C. V. S. ஹைஸ்கூல் பெங்களூர் கன்டோன்மெண்டு-விலை ரூபா ஒன்று. இதில் மயிலம் தலபுராண வசனமும் முருகக்கடவுள்மீது மதுரகவி மாலையும், அருணகிரிநாதர் திருப்புகழில் சில பாடல்களின் திரட்டும், இரதபந்தம், சக்ரபந்தம், மயூரபந்தம் முதலிய சித்திரப்பாடல்களும் அடங்கியுள்ளன. இவை பக்தியையும், உருக்கத்தையும் விளைவிக்கும் தகுதியுடையன. முருகவேள் தோத்திரத்தில் ஈடுபட்டுள்ளோர் வாங்குதற்குரிய நூல். ஆசிரியர் விலாசத்துக்கெழுதிப் பெறுக.

**கிழவர் குமாரரானார்** :—இது செட்டிநாட்டு சாண்டோ-கீழச்சிவற்பட்டி திரு. லெ. சோமசுந்தரனாரால் இயற்றப்பட்டது; அமெரிக்க வணிகர் ஸான்போர்டு பென்னெட் என்பார் 50 வயதுக்குமேல் இளமைபெற்ற விந்தையை விளக்குகிறது. மிக அரிய நூல். ஆசிரியருக்கு எழுதிப்பெறுக.

**சுயமரியாதைச் சமத்துவப் பாடல்கள்** விலை 2¼ அணா.

**குடிகாரர் மகாநாடு** :—விலை 1½ அணா. ஆசிரியர் முத்து-கார்வண்ணனார்-சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பும் நோக்கமுடையன. நகைச்சுவை மிகுந்துள்ளன. வேண்டுவோர் "சமத்துவப் பிரசுராலயம் 195, தெற்குமாசி வீதி, மதுரை"க்கு எழுதுக.

## நம் சமாஜத்தினர் சமயப் பிரசாரம்

நம் சமாஜத் தொண்டருள் ஒருவராகிய திருவாளர் காவித்தண்டலம் வேதாசல முதலியார் அவர்கள் திருப்புலிவனம் சிவாலயத்தில் மாணிக்கவாசகர் சரித்திரத்தையும், உத்திரமேரூர் குருபூசா மடத்தில் "இறை அன்பு" என்னும் பொருளையும்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தி சமயத்தொண்டு செய்ததை மிக மகிழ்ச்சியோடு வெளியிடுகிறோம். அவ்வாறே அன்பர் மறை - திருநாவுக்கரசனார் ஒரு திங்களில் மூன்று இடங்களிற் சென்று தொண்டாற்றிய செய்தியும் மகிழ்ச்சியை விளைவிக்கிறது. அன்பர் தி. கு. கி. நாராயணசாமியும் திருநாவலூரில் சுந்தரர் திருநாளில் கூட்டம் நடத்திவைத்தது குறித்தும் மகிழ்ச்சியே எழுகின்றது.

அடித்துக்கொண்டு வருவதும், அதில் சுழல் காணப்படுவதும், பெரிய மரா மரங்களை அவ்வெள்ளம் சுமந்தோடு வதும் இவைபோன்ற பல வர்ணனை களும் அப்பதிகமுற்றுங் காணப்படுவ தால் அவர் பாடிய காலத்தில் மழை பொழிந்து பெருவெள்ளம் காவிரியில் ஓடியிருக்க வேண்டுமென்பதும், அதையே ஓர் உவமைபோல் காட்டிப் பழவினையைப் பற்றறுக்கப் பரமனைப்பாட வேண்டுமென்றும் தவநெறி உணர்த்து வதும் காணலாம். அத்திருப்பதியில் அப்பர் பாடிய பதிகமானது முதுவேனிற்காலத்தைக் காட்டும் சொற்றொடர்களால் நிறைந்து விளங்குகின்றது.

"சலைதனைச் செய்து வாழ்வான்
ஜலத்துளே அழுந்துகின்ற
இவையொரு பொருளுமல்ல."

என்பதும்,

"சாமனை வாழ்க்கை யான
ஜலத்துளே அழுந்த வேண்டாம்
தூமலல் அகிலுங் காட்டி
தொழுதடி வணங்கு மின்னே!"

என்பதும், ஜோதியை, சுடரை எனத் "துருத்தியானை" குறிக்கப் படுவதும் "உடல்தனைக் கழிக்கலுற்ற", உயிர்கட்கெல்லாம் அது பயன் தருமென்பதும்,

"பொன்னியின் நடுவதன்னுள் பூம்புனல்
பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி"

யென்று அப்பதியை வியந்து பாடுதலும் கவனிப்போமாயின், சூரியவெப்பத்தால் மன்பதை வருந்தும் முதுவேனிற் காலம்போல் அவர் பாடிய காலம் விளங்குகிறது.

திருஞானசம்பந்தரை அதிக வெய்யிலிலும் அதிக மழையிலும் செல்லவொட்டாது, அவரை அவர் அடியார்கள் அன்பினால் தடுத்து இளவேனிற் காலத்திலேயே பெரும்பாலும் யாத்திரை செய்வித்தனர் என நாம் அநுமானிக்க, அவர் தேவாரப் பதிகங்களின் இயற்கை வர்ணனை துணை புரிகின்றது. அவ்வர்ணனை பெரும்பாலும் இளவேனிற் காலக் காட்சியாகவே காணப்படும்.

"வெயிற்கெதிர்ந்தி டங்கொ டாது
கந்து ளிர்ந்த பைம்பொழில்
துயிற்கெதிர்ந்த புள்ளி னங்கள்
மல்கு தண்டு ருத்தியாய்!
மயிற்கெ திர்ந்த ணங்கு சாயல்
மாதொர் பாக மாகமூ
எயிற்கெ திர்ந்தொ ரம்பி னாலெ
ரித்த வில்லி யல்லையே?"

இது, இளவேனிற் காலத்தில் நடுப்பகலில் குளிர்ந்த சோலையின்கண் ஆளுடைய பிள்ளையார் வீற்றிருக்க, அவர் கண்ட இயற்கைக்காட்சிபோலும். திருவீழிமிழலை திருப்பதியிலே பாடியதொரு பதிகத்தில் ஒன்பதாம் பாசுரமாகிய,

"பண்டேழல குண்டானவை
கண்டானுமுன் னறியா
ஒண்டீயுரு வானானுறை
கோயின்னிறை பொய்கை
வண்டாமரை மலர்மேன்மட
வன்னந்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர்
வீழிம்மிழ லையே"

என்னும் இச்செய்யுளில் வேனிற்காலத்திலேயே பூக்கும் தாமரை மலர்கள் தடாகத்தில் நிறைய, அதில் அன்னங்கள் அப்பூக்களின் பேரில் நடந்து கண்கவரச் செய்வது நினைந்தாற்போல வருணிக்கிறார். திருத்துருத்தியின் ஒன்பதாவது பதிகத்தில்,

"களங்கு ளிர்ந்தி லங்குபோது காத
லானு மாலு மாய்
வளங்கி ளம்பொ னங்கழல் வணங்கி
வந்து காண்கிலார்

அளம்பி எம்பி ஷைச்செ ளித்த
குத்தி யாய்தி குத்தடி
உளங்கு விர்ந்த போதே லாழ
கந்து கந்து ளைப்பனே ”

எனப் பாடுவதுங் காண்க.

உளங் குளிர்ந்தபோதெலாம் உகந்து பாடுவது சம்பந்தர் செய்கையாய் நின்றது. “உகந்துஎழுந்துவண்டினம்துத்த நின்று பண்செய்யும்” பொழில் சூழ்ந்த சோழநாட்டுக் குற்றாலத்தில் “பித்தர் பித்தனை” பிறப்பு அறுப்பான் பாடுவதே அப்பதிகத்தின் அமைப்பாகும். மலையுச்சிகளின் பொன்னை அறுத்துச் செல்லும் நுண்ணிய அருவிகள் கலந்து பளிங்கு போன்ற நீரோடை தனது அடியில் நவரத்தினக் கற்களின் ஜோதி காட்டி உன்னதமாய் ஓடிக் காவிரியாகும் அதன் கரையிலுள்ள இத்தலத்தில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சலன மற்ற மனதோடு தனது முற்பிறப்பை எண்ணி யோக நிலையில் வதிந்து பாட அவ்வியற்கைத் தோற்றமானது மேம்பட்ட துணைக் கருவியாய் அவருக்கு விளங்கியது:—

“ துறக்குமா சொலப்படாய்,
துருத்தியாய்! திருந்தடி
மறக்குமா றிலாத என்னை,
மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்!
பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்
கிழுக்குகின்ற தென்னையே?”

எனவே, திருஞான சம்பந்தர் பாடும் திருப்பதிகளில் இளவேனில் தோற்றம் அவர் மனதில் உண்டாக்கும் உவகையும், ஞானமும் பெரும்பாலும் காட்டா நிற்கும். திருமாகறல் என்னுந் திருத்தலத்தில் இவர்பதிகத்தைக் காண்போமாக. அதன் ஒன்பதாவது பாசுரம் “தூயவிரி தாமரைகணெய்தல் கழுநீர் குவளை தோன்றமது வுண்டு பாய வரி வண்டு பல பண்முரலுமோசை பயில் மாகறலுளான்” எனத் தொடங்கியதால் இதுவும் இளவேனிற் காலத்தியதோ எனின், மங்கையரும், மைந்தரும் புனலாடி மகிழும் காலையில் கழனிகளின் “வீங்கு கதிர்”களில் முத்துக்கள் காணப்படுவது வசந்த கால ஆரம்பமன்றோ? திரு ஒத்தூரில் திருஞான சம்பந்தர் ஆண்பனையைப்பெண் பனையாக்கியதும் அவை குலைகள் விட்டதும் இளவேனிற் காலமன்றோ?

புகலிவேந்தர் எவ்வெப்பதிகங்களில் தாமரையை வியந்து பாடுகின்றாரோ, அல்லது இளவேனிற் காலத்தின் பூக்களின் வர்ணனையைக் குறிப்பிடுகின்றாரோ, அப்பதிகங்களெல்லாம் வீசு தென்றலும், வீங்கிளவேனிலும், மூசு வண்டறைப் பொய்கையும் தரும் இன்பமே காட்டும்.

தாமரையின் வர்ணனை வாராத பதிகங்கள் வேனிற்காலத்திலபாடப்பட்டனவல்ல என்னும் அனுமானத்திற்கு ஒத்ததுபோல் ஆங்காங்கு திருஞானசம்பந்தர் யாத்திரைகள் சேக்கிழார்கூறும் சரித்திரத்திற்கும் பொருத்தமாயிருக்கின்றது. இதன்றியும் மாரிக்காலத்தில் அவர் சென்ற திருப்பதிகளின் பேரில் பாடப்பட்டனவென்று சேக்கிழாராலும் நமது அனுமானத்தாலும் எண்ணப்படுவன வற்றுள் பொருத்தமாய் அக்சான்றுகள்போல் ஆற்று வெள்ளமும், அதில்பலவிதப்பொருள்கள் அடித்து ஓடுவதும் காணலாம். திருக்காளத்தியில் ‘மண்ணுமா வேங்கையும், மருதுகள் பீழ்ந்துந்தி, நண்ணுமாமுகிலி’ சந்தனம், அகில், தேக்கு, பீலிகள், கரும்பு, தேன்கூண்டு, வாழை முதலியன அடித்துவருவது இவர் அப்



பதியிற்பாடிய ஒருபதிகமுற்றும் காணலாம். மற்றொரு பதிகத்திலோ “புனவர்புனம் மயிலனைய மாதரொடுமைந்தரும் மணம் புணரும் நாள்” பகரப்பட்டதும், மாரிக்காலத்தில் திருஞான சம்பந்தர் திருக்காளத்திக்குச் சென்றனர் என்பதற்கு ஓர் அறிகுறியாய் விளங்கும். இங்கு, இடும்பாவனம் போல் “செந்தாமரை மலர் மல்கிய செழுநீர் வயற்கரை” காணப்படவில்லை.

ஆகையால் சம்பந்தர் பதிகங்களை வேனிற்காலப் பதிகங்கள் இவைஇவை என்றும், மாரிக்காலப் பதிகங்கள் இவை இவை என்றும் அறிஞர் பகுத்து தனித்தனி எடுப்பாராயின், இயற்கையில் சூரிய உஷ்ணச் சுடரால் விளங்கும் நமது நாட்டின் அழகு எத்தன்மைத் தென்றும், அவ்வியற்கையின் வர்ணனை நமது சமயாசாரியருக்குச் சமமாய் ஓவியம்போல் காட்டக்கூடிய கருவிகள் உலகத்தில் இல்லை என்றும், இவ்வோவியங்களை அக்கலைஞானிகள் நமது நாட்டில் படமெழுதி வெளியிடுவாராயின், அவை, கற்றோர்க்கும் மற்றோர்க்கும் மனங்கவரும்படி ஆத்மஞானம் உணர்த்துமென்பதற்கும்ஐயுறவில்லை.

“ தண்புனல் நீள்வயல் தோறுந்
தாமரை மேலன்னம் வைகக்
கண்புணர் காவில் வண்டேறக்
கள்ளவி ழுங்கடம் பூரில்
பெண்புனை கூறுடை யானைப்
பின்னுச டைப்பெரு மானைப்
பண்புனை பாடல் பயில்வார்
பாவமி லாதவர் தாமே.”

---

# அன்பு நெறியும் சைவ சித்தாந்தமும்

[அ. வரதநஞ்சைய பிள்ளை]

தொன்று தொட்டு இவ்வுலகம் நேர்மையுற நடைபெற்று வருவதற்குக் காரணம் யாது? என ஆழ்ந்து நினைவு கூர்வோமானால், உயிர்க் கூட்டங்கள் ஒன்றற்கொன்று துணை புரிந்து வாழும்படி அவற்றின் உள்ளத்தினின்று தூண்டி நடாத்தும் ஓர் அற்புத சக்தியே என்னும் உண்மை காண்போம். ஒருவர், எத்துணை வலியராயினும் பிறர் உதவியில்லாத விடத்து ஒரு கணமும் உயிர்வாழ்தல் இயலாது. பெற்றோர் தம் மக்களைக் கண்ணுங் கருத்துமாய் வளர்ப்பதற்கும், ஆடவரும் பெண்டிரும் காதற்கிழமை யுடையராய் மகிழ்ந்து வாழ்தற்கும், உடன் பிறந்தோர், ஒற்றுமை பூண்டு அரிய செயல்களை ஆற்றுதற்கும், நட்பாளர் தம்மில் ஒருவர்க்குற்ற இன்ப துன்பங்கள் தமக்குற்றனவாகக் கொண்டு உயிர்க் குயிராய்க் கலந்தொழுகுதற்கும், தலைவர்கள் தம் ஏவலரைக் கனிவுடன் நடத்த, அவர்களும் தலைவர் கட்டளைகளைப் பணிவோடேற்று நிறைவேற்றுதற்குமாக, இங்ஙனம் மக்கட் பகுதிக்கே யன்றி, அஃறிணையின்பாற்பட்ட ஏனை உயிர்களும் ஆணும் பெண்ணுங் கலந்தின்புற்றுத் தமது குஞ்சு, குட்டி அல்லது கன்றுகளைக் கவனமாய்ப் பாதுகாத்துப் பருவம் வரும் வரை வளர்த்துவிடுதற்கும் ஏதுவாய் நிற்கும் மூலப்பொருள் அத்திவ்யசக்தி ஒன்றேயாம். இதுவே அன்பு என்னும் பெயரால் அழைக்கப் பெறுவது. இவ்வன்பு மிக்குப் பெருகியவழித் தன்னல

தன்னைமுற்றும்மறந்து பிறர்நலத்தையே காதலிப்பதாய அருளாகின்றது. மிக்க அன்பும் அருளுமுடைய ஒரு சிலர் தோன்றுவதாலேயே இவ்வுலகம் நன்கு நடைபெறுகின்றது என்னும் இவ்வுண்மையைப் பன்னெடு நாட்கு முன்னிருந்த பாவலர் ஒருவர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

"உண்டாலம்ம இவ்வுலகம்......
...தனக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே"
(புறம் 182)

ஒருவன் எத்துணை இரக்க மற்ற கன்னெஞ் சுடைய கள்வனாயினும், ஓயாதுயிர்க் கொலை புரியும் கொடும் பாவி யேனும் அவனும் தன் காதலி யோடும் அருமை மக்கள் அல்லது நட்பினரோடும் அன்பாற் கொஞ்சிக் குலாவி இன்புறாதிரான். அன்றித் தன் மாட்டேனும் தலை சிறந்த அன்பு கொள்ளாதிருக்க முடியாதன்றோ? ஆகவே, எவ்வாற்றானும் அன்பில்லாத வுயிர்கள் எவையுமிரா என்பது துணிபே. அங்ஙனமாயின், சிலரை அன்பில்லார் என்பதென்னையோ வெனின், தம்மாட்டும் தமர் மாட்டும் அன்புடைமை இயல்பே. பிறர் மாட்டும் இரங்காதாரையே அன்பில்லா ரென்பர் என்க.

இவ்வன்பில்லாத வழி, உயிர் நிலை பெற இடனிராது. யாண்டும் என்புந் தோலும் போர்த்த பிணமாய்த் தோன்றும். உயிருள்வழியும் பிறர்பால் அன்புகொள்ளாதோரை கெட்டுயிர்போ டற்ற பிணமாகவே கருதப் படும்.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு."
(திருவள்ளுவர்.)

இதுகாறும் ஆய்ந்தவற்றால், எல்லாவுயிர்களையும் ஆட்டிக் கூட்டி ஆதாரமாய் நடாத்தும் ஒருபொருள் அன்பேயென்றும், அஃது உயிர்க்கு விளக்கமாகிய இயற்கைப் பண்பென்றும், அதனைத் தன்மட்டிலன்றித் தமரிடத்தும், ஆங்கே பிறவுயிர்களிடத்தும் செலுத்திப் பெருகுவித்தல் சிறப்புடைத்தென்றும் விளங்கிற்று. இதே அன்புதான் நாம் எய்தும் இன்பங்களனைத்திற்கும் பிறப்பிடமாகவும் நிற்கின்றதென்பதையும் சிறிது ஊன்றி நோக்கின் ஐயமறக் காணலாம்.

ஒருவரை ஒருவர் மனமார நேசிப்பது அன்பினாலேயே. நேசப்பான்மையுடையோரைக் காணினும் அளவளாவிக் கலப்பினும் நமக்கு இன்பமே விளைகின்றதல்லவா? பழக்கமற்ற புதியாரைக் காணின் விருப்பமும் வெறுப்புமற் றிருக்கின்றோம். பகைஞரைக் கண்டபோதோ கடுஞ்சினம் மூளக் கலாம் விளைத்துத் துன்பத்தை வருவிக்கின்றோம். ஆகவே இன்பம் பிற் கூறிய ஈரிடத்துந் தோன்றுவதில்லை. நம்மாட்டு அன்பிலரென்று கண்டவழி, மனைவி, மக்கள், பெற்றோர், துணைவர் முதலிய பெருங்கேளிர் எவரேயாயினும் முனிவு கொண்டு நீக்கத் துணிவோமே யன்றி உறவாடத் துணியோம். அவர்கள் முன்னிலையில் நமக்கு இன்பம் ஒரு சிறிதும் உண்டாவதில்லையன்றோ?

இங்ஙனம் உலகில் நம்மை நிலை பெறுவித்து இன்பப்பேற்றையும் ஒருங்களித்து வாழ்விக்கும் அன்பினுஞ் சிறந்த அரும்பெரும் பொருள் வேறுண்டோ? கூறுமின் அன்பர்காள்! இத்துணை ஒப்புயர்வற்ற அவ்வன்பைப்



பற்றிய விசேடங்களை மேலும் அறிய விரும்புகிறோம்.

திருக்குறள் நூலாசிரியரும் உரையாசிரியர்களும் அன்பைப்பற்றி யாது கூறுகின்றனர்?

"அன்பு முற்றேன்றிய வழியே அருள்பின் தோன்றும். ஆகலின் அருளைப் பெறும் அன்னை அன்பே யாம். அன்பாவது தம்மிடத்துத் தொடர்புடையார் மாட்டு நிகழும் ஆன்ம உருக்க நெகிழ்ச்சி. அஃதுளதாதலைத் தனதன்பர்களின் இடுக்கண் முதலியவற்றைக் கண்டு கேட்ட வழித் தோன்றும் கண்ணீரே புலப்படுத்தும். அன்பின் மகவாய்த் தோன்றும் அருள், தொடர்பு கருதாது அனைத்துயிர்கள் பாலும் நம்போன்ற உயிர்கள் எனக் காதலித்து ஒரு பெற்றித்தாய் நிகழும் ஆன்ம இரக்கம், அஃதுளதென்பதனைப் பிறவுயிர்களுக் குற்ற இடர்ப்பாடுகளைப் பரிந்து நீக்கும் செய்கையே புலப்படுத்தும்" என அறைகின்றனர்.

கல்வியிற் பெரியராகிய கம்ப நாடரும், இராமனுதியோர் பிரமாத்திரத்தால் மயங்கி மூர்ச்சித்த காலையில் வீடணனெய்தும் இன்னலை நோக்கி அன்பின் செய்கையை வியப்பாராய்,

"என்பென்பதி யாக்கை யென்பதுயி
ரென்பதி வைக ளெல்லாம்
பின்பென்ப வல்லவே னுந்தம்
முடை நிலையிற் போரா
முன்பென்ப வுள வென்றாலும்
முழுவதுந் தெரிந்த வாற்றால்
அன்பென்ப தொன்றின் றன்மை
யமாரு மறிந்த தன்றால்"

"நரம்பு தசைப் பகுதி முதலியவற்றினும் சிறந்த வன்மையுற்று உறுதி பெறத் தாங்கும் என்பில்லையேல் நம்முடல்நிலைபெறாது. உடலில்லையெனின் உயிரும் நிலையாது. ஆகவே, என்பு, உடல், உயிரென்னும் இம்மூன்றனுட் சிறந்தது எது என்பீர்கள். உடலுறுப்புக்களில் எதனை இழந்தாயினும் உயிரைப் போற்றுவோமாதலின் உயிரே சிறந்ததென்பீர்கள். ஆம், எதன் பொருட்டு எதனை இழக்கத்துணிவோமோ அவ்விழக்கும் பொருள் தாழ்ந்ததென்பதூஉம், பேணும் பொருள் உயர்ந்ததென்பதூஉம் நிச்சயமே யல்லவா? இனி, உயிர், அன்புஎன்னும் இரண்டையும் எடுத்துக்கொண்டு இவற்றில் யாது சிறந்ததெனப் பார்ப்போம். தமது அன்பர்கட்குத் தீரா இன்னலோ இறுதியோ நேரக்கண்ட விடத்துப் பொறாது தம்முயிரிழப்பாரையும் காண்கின்றோமாதலின், முன்னைய நியமம் பற்றி உயிரினும் அன்பே தனி சிறந்தது என்போம். அற்றன்று. என்பு முதலியன உளதாகலின் உயிரும், அவ்வுயிருளதாகலின் அன்பும் தலையெடுப்பக் காண்கின்றமையின், எப்பொருள் எதற்கு ஆதாரமோ அஃதே சிறப்புடைத்து என்னும் நியாயம்பற்றி அவையும் ஒரு நிகரனவாகச் சிறந்தனவேயாகக் கோடும், அம்முறையே, அன்போடு உயிர்முதலியவும் இன்றியமையாச்சிறப்பினவே என்பீரெல், ஒன்று நோக்குமின்! என்பு முதல் உயிரீறாகவுள்ள பொருட்களின் இயற்கை இனைத்தெனப் பேறறிஞரால் அறியப்பட்டிருப்ப, அன்பின் இயல்பு இஃதெனஎன்றும் தேவர் முதலியோராலும் அறியவொண்ணாதாகலின் அஃதே ஒரு தலையாய் உயர்வுடைத்தாம்" என இத்துணைவிரித்துக்கூறியுள்ளார்.

எக்காலத்திலேனும் புதிய புதிய வுணர்ச்சிகளும் ஆராய்ச்சிகளும் தோ

ன்றி உலகியல் மாறுபடினும் உயிர்கள் அன்பு கொண்டொழுகலே வேண்டும். அஃதே சிறந்தது. அவ்வழியானன்றி இன்பம் பெறுதலும் இயலாதென்னும் இவ்வியற்கைத் தத்துவம் மாற்றமுடியுமா? கூறுமின் அறிஞர்காள். முடியவே முடியாதன்றோ?

இவ்வாறு என்றும் மாறுபடாத இயற்கையை அடிப்படையாகக் கோலி எழுந்த ஒருமாபெருஞ் சமயமே நமது சைவசித்தாந்தம் என வுணர்வோமாயின், நாம் மிகவும் இறும்பூதும் மகிழ்ச்சியும் எய்தாமோ?

இனிச் சமயங்களைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். தெய்வங் கொள்ளும் (ஆத்திக) சமயங்களெல்லாம் தத்தம் கடவுளரை மெய்யன்போடு வழிபட்டு வணங்கவேண்டுமென்கின்றன; ஆயினும் அன்பையே கடவுளெனத் துணிந்து நம் சைவசமயத்தைப்போற்கூறும் சமயங்கள் எவையுமில. நடுநிலையுள்ளங்கொண்டு நாடுமின் நண்பர்காள்!

“அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.”
—(திருமூலர்)

அன்போடு அத்துணை நெருக்கமாய்ப் பிணைந்துள்ள தன்மை நோக்கிக் கடவுளை அன்புமயன் என்று கூறப்பட்டது. அறிவே யுருவமான கடவுள் அன்பு மயமாகவும் இன்ப மயமாகவும் விளங்குகின்றார். மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல் அன்பைக் கொண்டே அன்பு மயக்கடவுளை அடையவேண்டும் என்பதே சைவ சித்தாந்தத்தின் மாட்சிமையுற்ற கருத்து. ஆ! ஆ!! அன்பே கடவுளெனக் கூறும் சமயத்தினராய நாம், அந்நெறியை எத்துணை பற்றுதலோடு கைப்பிடிக்க வேண்டும்! பிறவுயிர்கள்பால் எத்துணை அன்புடன் ஒழுகல் வேண்டும்!! நினைமின் நேயர்காள்! நம் உள்ளத்தில் இரக்கம்தோன்றிய பின்னே ஒருவர்க்குதவி புரிகின்றோம். ஆதலின் அன்புமுன்னும் அருள் பின்னும் காணப்படும் முறையில் அன்புருவச் சிவத்தை முதற்கண்ணும் அதனோடு பிரிவற நிற்கும் அருள் வடிவச் சத்தியைப் பின்னுமாக வைத்து நம் சமயநூற்கள் ஓதுவனவாயின. அன்பாகிய சிவம் அறிதற்குரியது. அருளாகிய சக்தி செய்கைக்குரியது. குடும்பத்தில் ஓர் ஆடவன் அறிவிக்கும் பணியை மனைபாட்டி செய்து முடித்தல் போன்ற தொடர்பு காணப்படுதலின் சிவசத்திகள் நாயகன் நாயகியாகக்கொண்டு கூறப்படும். சிவம் அருவங்கட்கு மூலமென்றும், சத்தி, உருவங்கட்கு மூலமென்றும் கண்டார் பெரியோர். அன்புடைமை காட்சியானன்றி மெய்ப்பாட்டால் அறியப்படுதலானும், அருளுந்தன்மை நேரே காட்சியாதலானும் அங்ஙனம் அமைவதாயிற்று. தொடர்ச்சியாக அன்பும் அருளும் நிகழுங்கால் முற்பிற்பாடின்றி அன்பினின்றும் அருளும், அருள் காரணமாக அன்பும் தோன்றிச் செல்வதை நோக்கியே,

“சிவம் சக்தி தன்னையீன்றும்
சத்திதான் சிவத்தையீன்றும்,
உவந்திருவரும் புணர்ந்திங்
குலகுயிரெல்லா மீன்றும்
பவன் பிரமசாரியாகும்
பான் மொழிகன்னியாகுந்
தவந்தரு ஞானத்தோர்க்கித்
தன்மைதான் தெரியுமன்றே.”

எனச்சித்தியாரில் கூறப்பட்டது. அன்புருவனாதலின் இறைவன் பத்தி (அன்பு) வலையிற்படுவோனாகிறான்.



இங்ஙனம் அன்பையும் அருளையும் சிவமும் சத்தியும் எனக்கொண்டு நிகழும் பெருமையிலேயே, “இராஜாங்கத்தின் அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ” “அந்தோ வீததிசயம் இச்சமயம் போல் இன்று: அறிஞரெல்லாம் நடுவறிய” எனப்பாராட்டித் தாயுமான அடிகளும் சாற்றுவாராயினர். “ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே யென்னுடையன்பே”! என மணிவாசகப் பெருமானாரும் அழைப்பாராயினர். கடவுளை அன்பே என அழைக்கும் அடிகள், வேண்டுவதெல்லாம் அன்பையே. திருவாசகத்தில் அவர் இறைவன்பாற் குறையிரந்து கெஞ்சிக்கேட்பது நம் நெஞ்சையுருக்கும் தகையது. திருவாசகத்தை ஒருகால் ஓதின் நெஞ்சுருக்கும் அன்பு தானே போதரும்.

“.......எனைக் காண்போர் வெருளா வண்ணம் மெய்யன்பை உடையாய்ப் பெற நான் வேண்டுமே.” “கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே”.....“நின்-அன்பரன் பெனக்குமாக வேண்டுமே” “என் அன்பும் பொய்யானால் அடியேனுன்னைப் பெறலாமே?” என் அன்பையே காதலித்து அதனை மேலும் மேலும் பெறற்கு இறைவனை வேண்டுதலோடமையாது, அன்பு சிறிதும் இல்லாததம்மை அவர் ஆண்டாரென அவர் கருணையை நினைத்து,.......“இங்கெனை எற்றினுக் காண்டாய்? வன்பாராய் முருடொக்குமென் சிந்தை; மரக்கண்; என் செவியிரும்பினும் வலிது” “இரும்பு தரும் மனத்தேனை ஈர்த்தீர்த் தென்னென்புருக்கிக்-கரும்பு தரு சுவையெனக்குக் காட்டினை” எனப் பல்லாற்றானும் பள்ளந் தாழவோடும் புனல்போல் கீழ்மேலாகப் பதைபதைத்துருகி அன்புக்குக் காட்டாக நிற்கின்றார்.

அன்பையே கடவுளாகக் கொண்ட ஒருசமயத்திற்கு அவ்வன்பையே காதலிப்பதும் அந்நெறியே ஒழுகலும் இயல்பே யன்றோ! சிவ பெருமான் அடியார்களெவரும் அன்பையே வேண்டி அவ்வழியே ஒழுகியவர்களே. அன்பு ஒன்றில்லையேல் இறைவனை அடைதல் இயலாதென்பதே முடிந்த முடிபு.

“என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்த வொண்ணாதே”

எனத் திருமூல நாயனார் அறுதியாக உறுதி கூறிப்போந்தார். காரைக்காலம்மையார் பேய்வடிவு தாங்கிச் சிவபெருமான் திருமுன் செல்லப் பெருமானார், “அம்மே நீ நம்பால் வேண்டுவதியாது?” என அருளலும்,

‘இறவாதவின்ப அன்பையே முதற்கண் வேண்டினார்’ எனச் சேக்கிழாரடிகள் செப்பினர். இறவாத இன்பத்தை இறவாதான்பால் வைக்கும் அன்பே அருளவல்லது. செத்துச் செத்துப் பிறக்கும் எனையோர்பால் கொள்ளும் அன்பு அவர் மாண்டுபோங்கால் துயர் தருமாகலின், இறப்பும் பிறப்பு மற்ற பெருமானை அன்பால் வழிபட்டு என்றும் மாறா இன்பத்தைப் பெறலே சிறந்தது என்பதூஉம் ஈண்டுப் பெறப்பட்டது.

அன்பையே கடவுளெனக் கொண்டதற்கேற்ப, சைவ அடியார் பலரும், அதனையே பெருக அநுபவித்து மற்றையோர்க்கும் வற்புறுத்திக் கூறியுள்ளவற்றை விரிப்பிற் பெருகுமென

விடுத்துச் சிலவற்றை ஈண்டெடுதுகின்றோம்.

“ அஞ்சலுந் தஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்துநினைமின் நாடொறும்”

—திருஞானசம்பந்தர்.

எனவும்,

“ அழலார் வண்ணத் தம்மானை
யன்பி லணைத்து வைத்தேனே”

“ மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே”

—திருநாவுக்கரசர்.

“ தொழுதெழுந் தாடிப்பாடி யழுமவர்க்
கன்பர்போலும் ஆவடு துறையினாரே”

எனவும், சுந்தரமூர்த்தியார் “ஏழையேன் பெய்ஙனநான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே” “அன்னே உன்னை யல்லால் இனியாரை நினைக்கேனே!” எனவும் அவ்வன்பையே பலபடப் பாராட்டி அந்நெறி ஒழுகினார்களென்பதறியக் கிடந்தது.

திருத்தொண்டர் பெருமை கூறியவிடத்து நமது சேக்கிழார் பெருமானார்,

“ கூடுமன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்”

என அருள்கின்றார். ஒருவர் பால் ஒன்று கொடுத்து ஒன்று கொள்ளல் வாணிபமுறையே யன்றி நன்றியாகாது. பயன் கருதிச் செய்யும் நன்றியினும் பயன்கருதாது செய்யும் நன்றி உயர்வுடைத்தாதல்போலக் கும்பிட்ட கைகளை விரித்திரக்கும் அன்பு சிறந்த அன்பாகாது. ஆகவே இறைவன் அருளுக, அன்றி அருளாதொழிக. நாம் அவரை அன்பால் வணங்கி வாழ்த்துதல் கடனெனக் கொண்ட கொள்கையினரே சிவ நேயச் செல்வர்கள் ஆனவரும். அவ்வடியவர் முறுகி வளர்ந்த அன்பு நெறியாலே தம் நலன்களை மறந்து செயற்கருஞ் செய்கைகளை விடாது எத்துணை இடுக்கண் அடுக்கி வந்த காலத்தும் தீரமாக நின்று நன்றாற்றிய வரலாறுகளையே பெரிய புராணம் முற்றும் மொழிவதாம். இங்கு வேறொன்றும் கருதற்பாலது. அன்பினிடத்து உயிர்கட்கருளும் உதவியே நிரம்பி யிருக்குமெனஎதிர் பார்த்தலுமியலாது. தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்கு ஓரிடையூறு அல்லது பெருந் தீங்கு செய்வோரைச் சிறிதும் பொறுது சினந்தொறுத்தலும் அன்பின் விசேட இயற்கையே. இதனையே,

“ அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை”

எனக் குறளாசிரியரும் கூறியுள்ளார். தமது ஒரு மகவின் சிரத்தை யறிந்து கறி யமைத்து அடியார்க்கிட்ட சிறுத்தொண்டரும், சிவபெருமானைப் பரவைமனைத் தூது செலுத்தி யதனைச் செவியுற்றுச் சுந்தரர்பாற் பகைமை கொண்டு அவரைக்காண நேர்ந்தவழித் தம் வயிற்றில் வாளாற் குத்திக் கொண்ட ஏயர்கோன் கலிக்காமனாரும், சிவகாமி யாண்டார் கொண்டுய்த்த திருப்பள்ளித் தாமத்தைச் சிதறியதெனப் புகழ்ச் சோழனார் பட்டத்தியானையைப் பாகரொடு துணித்த எறிபத்தரும் இவர் போன்றோரின் மறச்செய்கைகளும், எம்பெருமான் கண்கெட்டதெனத் தங்கண்ணை உவப்புடன் இடந்து அப்பிய கண்ணப்பர் திறமும் தீய செயல்களாக நோக்குவோர்க்குப் புலப்படினும் உண்ணின்றியக்கிய பேரன்பின் முதிர்ச்சியே அவ்வாறு செய்ததென்கை தேற்றமே.

இவ்வாற்றால் அன்பையே வேண்டும் அடியார்களின் ஒழுகலாறும் அந்நெறி



யின் வழித்தே யாதல் பெற்றாம். முடிந்ததன் முடிபாக வீடுபெறும்நெறியை விளக்கும் சிவஞான போதத்திலும் “காணு மியல்பு வாய்த்தகண்கட்கு உயிர் பொருட்களை யுணர்த்துதல்போல, அறிவிப்பின் அறியுமியல்பினவாய உயிர்கட்குண்ணின்று யாவற்றையும் இறைவனே உணர்த்துகின்றானென்னும் உண்மையை யுணர்ந்து அப்பெருமான் ஓயாது நமக்குச்செய்துவரும் ஒப்பற்ற கருணையையே வியந்து வியந்து உள்ளத்துப் பெருகும் மறவா அன்பாலேயே அரன் திருவடிகளை ஆன்மாக்கள் அடையும்” என்றுணர்த்தப்பட்டது.

ஆதலின், ஆதிமுதல் இறுதிவரை சாத்திரம் தோத்திரம் யாவும் விதந்து கூறும் அன்பு நெறியை முன்பின் முரணாது நிறுவும் சைவசித்தாந்தமே எம்மதங்கட்கும் சம்மதமாய்த் தலைசிறந்து விளங்குமென்க.

இச்சைவ சித்தாந்த உண்மைகளை நன்கு விளங்க உணராமையானோ உணர்த்துவார்ப் பெறாமையானோ சமயச் செருக்கால் பற்பலரும் வாதிட்டுப் பகைப்பவர்களாயிருக்கின்றனர். அன்பு கொள்ளும் வழியைத் தெரிவிக்கத் திருவருட்பிரகாச வள்ளலார் அருட்பாசுரமொன்றை எடுத்துக்கூறி இக்கட்டுரையை முற்றுவிப்பாம்.

“ நினைந்து நினைந் துணர்ந் துணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண்
ணீரத னாலு டம்பு
நனைந்து நனைந்து.......................
எனதுரிமை நாயகனே யென்று
வனைந்து வனைந் தேத்துதும் நாம்
................................”

இறைவன் பால் எங்ஙனம் அன்புடையராவோம்? என்னுங் கேள்விக்கு ஏற்ற விடையை வள்ளலார் நன்கு அளிக்கின்றார். நமது உடலில் உயிர், யார் அருளால் தங்குகின்றது? அன்னையின் கருப்பையில் நமக்கு ஊட்டி வளர்த்த உத்தமன்யாவன்? வானத்தை, முகிலை, மழையை, பல உணவுப் பண்டங்களை ஆக்கிய தொழிலாளன்யாவன்? உடலை உயிர்க்கு ஆதாரவாக நிறுவிக் கருவிகரணங்களை அவ்வுயிர்க்கு ஏவலாக அமைத்து, ஈண்டு நம்மை அனுப்பிய தலைவன் எவன்? நீண்ட கடல், கரையின்றி எவனதாணையால் நிற்கின்றது? கதிரும்மதியும் நாளும் கோளும் பருவங்களும் காலந்தவறாது ஒழுங்காகத் தோன்றுவது எவனுடைய ஏவலால்? எனத் தன்னையும் தன்னைச்சுற்றிலுமுள்ள பொருட்களையும் ஊன்றி நினைந்து பார்க்குந்தோறும் அறிவு தலைப்பட்டு அவ்வறிவு உண்மை நிலையைக் கண்டவழி நெஞ்சம் சிறிதுசிறிதாய் நெகிழ அன்புதோன்றி, அது பெருகப்பெருக அத்தகைய தலைவனை எய்தப்பெறாப் பாவியானேனே! வாழ்நாட்களை வீண்போக்கினேனே எனத் தன் குற்றமும் அவனது பெருமையும் விளங்கி ஆற்றாமை மிக்கு கண்களில் மழைபோல் நீர்பெருக இவ்வண்ணம் மனம் தன் கடப்பாட்டைச் செய்யப் புக்க போழ்து,வாக்கு எம்பெருமானைப் புகழ்ந்து பாடலுற, உடம்பும் வீழ்ந்து பணிதல் செய்யத் தொடங்கும்.

ஈதே அன்பைப் பெருக்கும் வழி என்று மேற்காட்டிய செய்யுளிற் கூறப்பட்டது.

இவ்வன்புநெறியைக் கடைப்பிடித்த சைவர்கள் பிறசமயங்களை வெறுக்குமாறென்னை? என்னுங் கடாவுக்கு விடை கூறுவோம். சித்தாந்தச் செல்வர்கள், “எச்சமயமும் உண்மைச் சமய

நெறிக்குச் செலுத்தும் சோபானங்களே. அவ்வச்சமயங்களும் ஒவ்வோருண்மையை மேற்கொண்டனவே. யாதொரு சமயத்திலும் உள்ள கடவுள் எம்மிறைவன் ஒருவனே. உயிர்களைப் பற்றிய இருண்மலத்தை ஒழித்தலே இறைவன் திருவுள்ளக் கருத்து. ஆகலின் ஆன்மாக்கள் எத்தகைய கீழ்நெறிக்கட் செல்லினும், பையப்பைய அவனருள் மேல்நெறிக்குச் செல்லவுய்க்கும். ஆகலின் எம்மதமும் அவ்வந்நிலைப் பக்குவங்கட்கேற்ப அமைந்தன. எல்லாச் சமயங்களிற் புகலப்படும் பொருள் அனைத்தும் இச்சைவத்தே காணப்படும். சித்தாந்தம் புகலும் அரும்பொருள் வேறெச் சமய நெறிக்கண் காணப்பெறு" என்னும் மெய்யுணர்வுடையர். ஆனதுபற்றி எவரையும் வெறுத்தலிலர். ஆயின், உயரிய தம் பெருநெறிக்குக் கேடு சூழ்வாராயின் அவர்களைத் திருத்தற்கும் நல்வழிப்படுத்தற்கும் ஒறுக்கவும் உரியர். அவ்வொறுப்பும் மறக்கருணையின்பாற்படும் என்க.

# திருஞானசம்பந்தர் திருமண நுட்ப ஆராய்ச்சி

[சுவாமிநாத பண்டிதர்]

க. "திருஞான சம்பந்தர் திருமணத்தில் வேட்கை கொண்டாரில்லையென்று சிலர் கூறுகின்றார். வேறு சிலர் இக்கூற்றுக்கு மாறுபட்ட கருத்தை வெளியிடுகிறார்" என்று நுட்பமுடையார் தெரிவிக்கிறார்.

அங்ஙனங் கூறு மிருதிறத்தாருள் வேட்கையின்றென்பார், சேக்கிழார் நாயனார் முதலியோரும், அஃதுண்டென்று வெளியிடுவார் நுட்பமுடையாரும் என்று எமது ஆராய்ச்சியில் தோன்றுகிறது. அதனைப் பின்னர் ஆங்காங்குத் தெரித்துச் செல்கின்றோம்.

உ "திருமணத்தைப்பற்றிப் பின்னேபுராணக்கதைகளும் தோத்திரங்களும் அன்பினின்றும் பொங்கிப் பெருகி யெழுந்தன. அன்பாலொருவரை அளவு கடந்து போற்றுவதும் பகைமையாலொருவரை வரம்பின்றித் தூற்றுவதும் சரித்திரத்திற் குரிய சான்றுகளாகா" என்கின்றார்.

நிகழ்ந்ததொன்றை யந்நிகழ்ச்சிப் பின் கூறுதலே முறைமையாகலின், திருமணத்தைப் பற்றிப் பின்னே யெழுந்த புராணக் கதைகளும் தோத்திரங்களும் மெய்ம்மையெனக் கடைப்பிடிப்பர் மேதாவியர். அங்ஙனமாக, 'பின்னே யெழுந்தன 'வென்று கூறியதற்குக் காரணம் என்னையெனப் பரியாலோசிக்கில், "புராணக் கதைகளும் தோத்திரங்களும் அன்பினின்றும் பொங்கிப் பெருகி யெழுந்தன" என்றதனானும் "அன்பாலொருவரை அளவுகடந்து போற்றுவதும், பகைமையாலொருவரை வரம்பின்றித் தூற்றுவதும் சரித்திரத்திற்குரிய சான்றுகளாகா" என்றதனானும் பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாரும் பிள்ளையார் மீது தோத்திரஞ் செய்தருளிய நம்பியாண்டார் நம்பியாரும், பிறரும் அவர்மீது வைத்த அன்பின் மிகுதிப் பாட்டினாலே அவரிடத் தில்லனவற்றையும் எடுத்துக்கூறி, அளவுகடந்து அவரைப் போற்றிவிட்டார்களென்றும், சமணர் புத்தர்மீது கொண்ட பகைமையினாலே அவரை வரம்பின்றித் தூற்றி விட்டார்களென்றும், நுட்பமுடையார் திட்பமாகத் தெரிக்கின்றார் என்பது வெளியாகா நின்றன.



அப்பெரியார், அவ்விரு காரணங்களையுங் கொண்டு பிள்ளையாரையும் சமண பௌத்தர்களையும் முறையே இல்லாதனவற்றைச் சொல்லி அளவு கடந்து புகழ்ந்தும், அளவு கடந்து இகழ்ந்து மிருப்பாராயின், அவை சரியன்று. அதன் மேலும் அவை சரித்திரத்திற்குரிய சான்றுகளுமாகாவென்பதனை யாமும் உடன்படுகின்றேம். அங்ஙனந்தானோ அன்றோ என்பதனைச் சிறிது ஆயுமுறையினாய்வாம்.

பிள்ளையார், பாண்டியன் சுரத்தை அவன்மீது விபூதி சாத்திக் தீர்த்தார்; அக்கினியிற்றேவாரத் திருவேட்டைப் போட்டுப் பச்சையாக எடுத்தார்; வைகையாற்றிலே தேவாரத் திருவேட்டையெதிரேற விடுத்தாரென்றற்றொடக்கத்தனவாக நாயனார் புகழ்ந்தன வெல்லாம் அன்பின் மிகுதியால் படைத்திட்டுக் கூறப்பட்டனவா. நிகழ்ந்தன நிகழ்ந்தபடி கூறப்பட்டனவா? வென்றாராயப்புகின், படைத்திட்டுக் கூறப்பட்டனவென்பாராயின், ஆகா ; என்னை? ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பிள்ளையாரருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களே போதியசான்றாக வெளிப்பட்டு நிற்றலான் என்க.

இனி, பிள்ளையார் மதுரைத் திருப்பதியிலே மடாலயத்தில் வீற்றிருந்த பொழுது சமணர் அம்மடத்தில் நெருப்புக் கொளுவினார். பாண்டியனது சுரத்தைச் சமணர்கள் தங்கள் சமயநூல் மந்திர முதலியவற்றால் நீக்கிற்றிலர். பாண்டியன் முன் அக்கினியிலே தங்கள் சமய உண்மையெழுதிய வேட்டையிட்டுச் சாம்பலாகப் பெற்றார். 'அத்திநாத்தி' என்றெழுதி வைகையிலே எதிரேறவிட்ட தங்களோடு நீர்ப்பெருக்கோடு செல்லப் பெற்றார்கள். பாண்டியனவையிலே எண்ணாயிரவரும் குரைத்தார்கள் என்றற் றொடக்கத்தனவாக நாயனார் கூறியன, அவர்மீது கொண்ட பகைமைபற்றிப் படைத்திட்டுக்கூறப்பட்டனவா? நிகழ்ந்தவாறு கூறப்பட்டனவா வென்றாராயப் புகின், படைத்திட்டெனின், அற்றன்று; என்னை? அதற்கும் பிள்ளையார் திருப்பதிகங்களே போதிய சான்றுமாகலானென்க. ஆகலான், அவை சரித்திரச் சான்றாதற்கிழுக்கென்னை யென்றொழிக.

ந. "திருமணக் காலத்தில் திருஞானசம்பந்தர் தீவலம் வந்தபோது, அத்தீ, தீவண்ணராகிய சிவபிரானை நினைவூட்ட" என்கிறார்.

"இராப்பகலற்ற விடத்தேயிரு"ப்பவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், சிவபிரானை மறந்தகால மொன்றுளதாயினன்றோ அத்தீ அவருக்குச் சிவபிரானை நினைவூட்டல் வேண்டும். "அவர் விழித்த கண் குருடாய்த்திரியும் வீர" ரன்றோ? இக்கருத்துப்பற்றியன்றே, சகலாகமபண்டிதரும்,

"பாஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க, வருஞானம் பவஞான மஞ்ஞான விகற்பம் வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந், தருஞானம் போகஞா திருஞான ஞேயந் தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந், திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்."

எனச் சிவஞான சித்தியுட் கூறியருளியதூஉமென்க.

182157

பட்டினத்தடிகளும் இக்கருத்துப் பற்றி,

"எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் [பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தக [மாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்."

என்றருளிச் செய்தமையு நோக்குக.

இன்னும் பிள்ளையார் தாமே மூன்றும் வயசிலே உயர்ஞான மிரண்டையும் ஒருங்கு பெற்றுத் தாம் சீவன் முத்தராயினமையைத் தமது திருவாக்கானு முணர்த்தியிருக்கின்றார். அதன் மேலும் பிறிதுமோர் சான்று வேண்டுமோ? நுட்பமுடையாரும், அவர் வாய்ச்சான்றே அவர் சரிதந் தாபித்தற்குப் போதியதென் றேற்புக் கொள்ளுகின்றார் அச் சான்றுறுத் திருப்பாசுரம் வருமாறு.—

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் [லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்ட [வன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந் [ததே"

இஃதே அஃதென அறிக.

உயர்ஞான மிரண்டாவன—பரஞானம் அபரஞான மென்பன. பரஞானந் திருவருண்ஞானம். அபரஞானம் சிவாகம ஞானம். அதனை, "உயர்ஞான மிரண்டா மாறுமலமகல வகலாத மன்னுபோதத் திருவருளொன் றென்றதனைத் தெளிய வோதுஞ் சிவாகம மென்றுலகறியச் செப்பு நூலே" என்பதனானு முணர்க. இவ்விரண்டையுமே சேக்கிழார் நாயனார் விரித்து,

"சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான
முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ரந்நிலையில்"

என்றருளிச் செய்தார்.

இவற்றாலும் பிள்ளையார் திருமண வேட்கை யுடையரெனப் பின்னர்க் கூறியிருத்தலும் மறுக்கப்பட்டது. இதனை "உரைத்து" மென்னும் உத்தியாகக் கொண்டு வேட்கையுடையரெனக் கூறு மாண்டாண்டு மது விரித்துக் கூறி மறுக்கப்படு மென்றுணர்க.

ச. "அவர் தம் மனைவி முதலிய அன்பர்கள் புடை சூழ்ந்து தொடாத் திருக்கோயிலை நண்ணிக் "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினரென்றும், அவ்வேளையில் திருக்கோயில் முழுவதுஞ் செஞ்சோதி மயமாய்த் திகழ்ந்ததென்றும், அச்சோதியினுள்ளே தம்மைச்சூழ்ந்து நின்ற மனைவி முதலிய பலரையும் புகுத்தருளித் தாமும் புகுந்து இரண்டறக் கலந்தாரென்றுஞ் சரித்திரங் கூறுகிறது." என்கின்றார்.

பிள்ளையாரைச் சமணராக்கிய நுட்பமுடையார் அவரைச் சமணராக்கவிடாத, பெரிய புராணத்தைத் தாம் வேண்டியது முடித்தற்கு ஈண்டுப் பிரமாணமாகக் கொண்டார். அங்ஙனங் கொண்டமை பிறர்க்கு வெளிப்படப் புலப்படாமைப் பொருட்டுப் புராணங் கூறுகிறதென்னுமல் 'சரிதங் கூறுகிறது' என்று சரித்துக் கூறினர்.

ரு. திருஞான சம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய "கல்லூர்ப்



பெருமணம் என்னுந் திருநல்லூர்ப் பெருமணத் திருப்பதிகத்தில் திருமணக் குறிப்புத் திகழ்கிறது. அக் குறிப் புணர்தற்கு முதலிரண்டு திருப்பாக்களைச் சிறப்பாகக் கோடல் ஈண்டைக் கேற்புடைத்தாகும்" என்கின்றார்.

அவ்விருதிருப்பாசுரங்களுமே அவர் கொள்கைக்கு அசனிபாதம் ஆயிற்றென்பதை அவற்றின் மெய்ப்பொருட் பெற்றி விரித்துத் தெரிக்குமாற்றான் யாவர்க்கும் இனிது விளக்குதும். கண்டு களிப்பாராக.

முதற்றிருப் பாசுரத்தின் பஃறிற உரைகளுள் முதலோர் விரிவுரை வருமாறு:—

நல்லூர் என்னுந் திருத்தலத்தின் கண்ணதாய திருப்பெருமணம் என்னுந் திருத்தளியினையே விரும்பி ஆண்டெழுந்தருளியிருக்கும் எம்பிரானே! நும்மையேநம்பி நும் அல்லவற்றை நம்பாத நுந்திருத்தொண்டர் வாக்கு மனங்களானுணர்ந்து சொல்லப்படாத அவ்வூர்ப் பெருமண மொன்றே மேற்கோடலுடைய ரன்றி அவற்றானுணர்ந்து சொல்லுதற்குரிய இவ்வூர்ப் படும் ஆரவாரமாய இம் மணத்தை மேற் கொள்ளாரன்றே! அற்றேல் அவர் அதனை மேற்கொண்டாற்படும் இழுக்கென்னை எனின், ஒருவன் நுமது கழுமலம் முதலிய பல வேறூர்களைத் தொழுமாற்றாற் றொழுமாயின், அவன் அதனானே மலங்கழுவிப் பெருமணமாய பேரின்ப மெய்து மெனவும், "நிருமல முடையார் பெருமணங் கண்டோரும் நிருமலரே" எனவும் ஓதும் நூல்கள் மெய்ப் பொருளவாகாது பொய்ப் பொருளாய் முடியுமாகலான், இருந்தவாற்றான் மலைபோலும் பெருந் துன்பு பரவுதற்கு ஏதுவாய்ப் பந்த முறுக்கும் இம்மணம் எனக்கு வேண்டா. வேண்டப்படுவது அவ்வூர்ப் பெருமணமே; ஆகலான், அதனையே யீந்தருளும். (எ - று)

கல்லென்பது எடுத்துக் காட்டுவமை. ஊர் முதனிலைத் தொழிற்பெயர். ஊர்தல், பரத்தல் மிகுதி எனினு மமையும். இனி, கல்லூர் என்பதற்குக் கல்லின்கண்ணே வரன்,வதுவின் தாள் தொட்டுக் காட்டும் மணக்கிரியையுள் ஒன்றென்பாருமுளர். அஃது அப் பொருள் படாமையானும்,அல்லதூஉம் உபலக்கணமாதற் கேலாமையானும், பொருட் சிறப்பின்மையானும், இத்னுள் அடங்குதலின் வேறு கூறவேண்டாமையானும் அவ்வுரை ஈண்டைக்கு யாது மியைபின்மை யறிக. பெருமை - அகந்தை, எல்லாப் பந்தங்கட்கு மூல காரணமாய அவிச்சை எல்லார்க்கும் புலனாகாமையின், எல்லார்க்கும் எளிதிற் புலனாதற்குரிய அதன் காரியமாய அகந்தையே கூறினர்; தூலமுணர்த்தியே சூக்கும முணர்த்தல் முறையாகலான். அகந்தையென முன்வருதலின் மேல் ஊர்தல் என்றது அதனது ஊர்தல் என்பது தானே போதரும் என்னுங் கருத்தால் விதவாதோதினர். சொல்லூர்ப் பெருமணம் என்புழி, பெருமை - ஆரவாரம். வேண்டப்படுவதென்பது முதலியன குறிப்பெச்சம். பல்லூர் - பலவூர் மேற்கழுமல மென நிற்றலின், பல்லூர், அக்கழுமல முடையார்க்குரிய பல்லூர் என்பது உணரப்படும் என்னுங் கருத்தாற் சொற்பல்காமைப் பொருட்டு அதனை யொழித்து எடுத்துக் கொள்ளப்பட்

டது. பெருமணப்பாட்டு என்பது மெலிந்து நின்றது. கழுமலம் பல்லூர்-கழுமலமும் பல்லூரும். பெருமணக் கழுமலப் பல்லூர்ப்பாட்டு என இயையும். பெருமணமாய பெரும்பயன் பயக்கும் உரிமையுடைத்தாகவைத்துப் பல்லூர் மேற்படும்பாட்டு எனவும், "நிருமல முடையார் பெருமணங் கண்டோரும் நிருமலரே" என அவ்வவ்வூர்வாய் நிகழும் மணநூல் எனவும் இரட்டுற மொழிந்து கொண்டுரைக்கப்பட்டது. பால் விளங்காத அஃறிணை இயற்பெயராகிய பாட்டு ஆகுபெயர். மெய் - மெய்ப்பொருள், சூடல்-மேற்கோடல், ஆய்த்தில வென்பது ஒருமைப்பன்மை மயக்கம். சூடார் என மேற்கோளெடுத்தோதி, அதனை மெய்யாய்தில வென்னும் ஏதுவாற்சாதித்து அதனைக் கல்லொக்கும் என்னும் எடுத்துக்காட்டான் வலியுறுத் தருளினார். தொண்டர் சூடலர் என இயையும். சொல்லாவூர்ப்பெருமணத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை. தேற்றமெனினுமமையும். சொல்லூர் வினைத்தொகை. நல்லூர்ப் பெருமணம் நல்லூருடைத்தாய பெருமணம். மேய - விரும்பிய மேவிய என்பதன் திரிபெனினும், இடைக்குறை யெனினும் அமையும். நம்பனே என்பது நீட்டும் வழி நீட்டல். ஏகாரம் : விளி.

நன்மை எவற்றினுஞ் சிறந்த நன்மை எனப்படும் வீடுபேற்றைத் தப்பாது பயத்தலின், காரணக் குறியாயிற்று என்பது தேற்ற நல்லூர் எனவும், பெரும்பயன் பெறுதற் கேதுவாய் நிகழும் இப்பெருமணமாய இதுவே, இதற்கு அமையும் சான்று என்பது தேற்றப்பெருமணம் எனவும், பிறவற்றான் விசேடிக்கப்படும் பிறவூரும், இதனான் விசேடிக்கப்படினும் முன்வாக்கியம் பெய்துரைக்கப்படாத பிறவூரும், இதனை ஒப்பன அல்ல என்பது தேற்ற இரண்டனுள் ஒன்றைத் தனிநிலை யாக்காது நல்லூர்ப் பெருமண மெனவும், இப்பெற்றித்தாய இதனை நீ கைவிட விருப்பின்மை பற்றியாதல், அன்றி நின்னை நின்னன்பர் விடாது விரும்புதல் பற்றியாதல், நினக்கு இத்திருப்பெயர் எய்திற்றுப் போலும் என்பது தேற்ற 'மேய நம்பானே' எனவும், சதசத்தாய உயிர், தம்மிற் கீழுள்ளவற்றைக் கழிக்கு முறையாற் கழித்துப் போங்கால், தம்மின் மேலுள்ளதனை யுணர்ந்து கோடற்கிடையே நிகழும், "நான் பிரமம்" என்றன் மாத்திரையினமைந்து மேலறிய வேண்டுவன அறியாத ஏகான்மவாதிகள் போலாது, "தைவமென்றுந் தைவமே என்னுமுயிரியல்பை உள்ளவாறுணர்ந்துடையர் என்பது தேற்றத், 'தொண்டர்' எனவும், ஒன்றனையுள்ளவாறுணர்ந்து இதுவே எமக்குத் தருமெனக் கொண்டார் பின் தகாதவற்றைக் கைக்கொள்ளாத வாறுபோல, வாக்குமனாதீதமாய நும் இயல்பை உள்ளவாறுணர்ந்து அதனையே மேற்கொண்டு பிறவற்றைக் கீழாகவைத்துக் கண்டுடையார், பிறவிக்கேதுவாய அவ்விழிபொருளைப் பின்னும் வேண்டுமெனக் கொள்வாரென்கை, ஒருவன் கான்ற சோற்றை விரும்பு மென்பதனோ டொக்கும் என்பது தேற்ற, 'சூடலர்' என்றொழியாது ஏகாரமுகத்தான் இனிது விளக்கிச் 'சூடலரே' எனவும், பதிபாசங்கள் சத்தென்னுஞ் சொல்லொப்புமை யுடையனவாயினும் தம்முட் பெரிதும் வேற்றுமை யுடைமைபோல, பேரின்ப சிற்றின்பங்கள் பெருமணம் என்னும் வாக்



கியத்தான் ஒப்பனவாயினும், அஞ்ஞானத் தானுவது, மெய்ஞ்ஞானத் தானுவதுஎன்னும்பொருளான்வேற்றுமைப் படுவனவென்பது தேற்றப் 'பல்லூர்ப் பெருமணம்' என்றாற் போலாது, வேறுவிசேடணங்காட்டிச் 'சொல்லூர்ப் பெருமண' மெனவும், உடன்வைத் தெண்ணப்பட்டோர் நால்வரின் முதல் நின்றாரும் அவரன்ன பிறரும் முதனூலும், உலகியல்பு, நில்லாத இயல்புடைத்து, ஸ்ரீ தலங்களை வழிபடுமாற்றான் வழிபட்டுடையார் அவ்வுலகியல்பாய சிறுமணங் கைவிட்டு வீடுபேறாய பெருமணப் பேறுடையார் என நியாய முகத்தான் வலியுறுத்து வைத்தோதும் பாட்டுக்களின் மெய்ப்பொருள், அவர் அதனைச் சூடுவாராயின் பொய்யாய் முடியுமென்பது தேற்றவும், சிற்றறி வுடையார் சிற்றின்பத்திற் கேதுவாய்ச் செய்யும் சிறுமணம் போலாது பிறர் பெரும்பயன் பெறுதற் கேதுவாய்ச் செய்யும் சிறுவர் மணம் ஆய பெருமணங் கண்டோர் பேரின்பெய்துவர் என்றோதும் மண நூல்கள், அம்மணம் போலும் இயமணங் கண்டோர் பேரின்பெய்தாராயின், பொய்ப்பொருளாய் முடியுமாகலான், இது கண்டோர்க்கு அதனை ஈந்தருளும் என்பது தேற்றவும், இருபொருள் தோன்ற, 'கழுமலம் பல்லூர்ப் பெருமணப் பாட்டு மெய்யாய்தில' எனவும், ஆகலின், அளவைகளானும் பொருந்து மாற்றானும் அநுபவமுடைய ஆசிரியர் ஆசாரத்தானும் வீட்டின்பம், எவ்வாறு அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையுந் தோற்றமு முடைத்தோ! கட்டாணுந் துன்பும் அவ்வாறேயாம் என்பது தேற்றக் 'கல்' எனவும், இங்ஙனமாகலின், அது இதுவென நினைப்பினும், நினைத்த மாத்திரையே நெஞ்சு துண்ணென்னுமாகலானும், அஃது அகந்தைக் கேதுவாமெனவே அதற்கேதுவாய ஆணவமல மறுமையானும், அம்மணத்தாற்றப்பாது காமவெகுளிமயக்கங்கள் நிகழ்ந்து அவற்றானழுந்தப்படுமென்பது தேற்ற 'ஊர்ப் பெருமணம்' எனவும், "வேண்டாமை வேண்டப் பிறவாமை" ஆம் ஆகலானும் "தூய்மை என்பது அவாவின்மை மற்றது வாய்மைவேண்டவரும்" ஆகலானும் தம்மை இடைவிடாது பாவித்து அவாவின்மை எய்தப் பெற்றேன், அதுவே வீடாம் என்பது கூறவேண்டாவாகலின், அது வேண்டாமைமேல் வேண்டுவதும் தானே பெறப்படும் என்பது தேற்ற, 'வேண்டா' எனவும் வைத்து உபதேசித்தருளினார்.

[குறிப்பு :—இது "கல்லூர்ப் பெருமணம்" என்ற பாட்டுக்கு ஓர் உரை. வேறு எழு உரைகளும் அவைகளின் விரிவாராய்ச்சியும் ஸ்ரீலஸ்ரீ பண்டிதர் அவர்களால் "சிவநேசன்" வாரத்தாளில் 20-7-'31 முதல் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன. விரிவஞ்சி அவைகளை ஈண்டுத் தொடர்ச்சியாக வெளியிடாது விடுத்தோம்.—பத்திராசிரியர்.]

# திருநாவலூர்

[தி. கு. கி. நாராயணசாமி]

பாத் தொடையால் தொண்டர்கள் தொகையைத் தெரிவித்த தொண்டர்காதனும் நம்பியாரூரன் அவதரித்த பதி நாவலூர். இது தென்னாற்காடு ஜில்லா, திருக்கோவலூர் தாலுக்காவில் கெடில நதிக்கரையில் கடலூருக்கு 27 மைல் மேற்கேயுள்ளது. விழுப்புரம்-திருச்சி இருப்பு வழியில் இருந்தை நிலையத்திற்கு 3 மைல் கிழக்கிலும், அப்பர் அவதரித்த திருவாமூருக்கு 6 மைல் மேற்கிலும் நின்று நிலவுவது. பதிமரம் நாவலானமையின் நாவல் ஊர் ஆயிற்று. இத்தலம் தமிழகத்தில் சுந்தரர் பிறப்பால் சிறப்பெய்திற்று. நாவலூர் மொழியொடு கோன், மன்னன், ஆளி இன்னபிற முடிபுகளால் முடித்து, நம்பியைப் புராணங்களில் வழங்குதல் காண்க. இப்பெயர் இதுபொழுது மருவித் திருநாமநல்லூர் என வழங்குகிறது. இப்பதி குறித்து சரிதம் ஆய்ந்து வெளியிடின் சைவ உலகிற்குப் பயன்படு மென்றெண்ணி ஆடி சுவாதிக்கு இக்கட்டுரைப் பொருள் விரித்துரைக்கப்பட்டது.

திருச்சிக் கல்வெட்டால், நாவுக்கரசர் பல்லவ அரசனும் முதல் மகேந்திர வர்மன் காலத்தவரென்பது (கி. பி. 600-630) முடிந்த முடிபு. அரசரது பண்டைத் தேவாரப் பதிகத் தொகையில் கருத்து வேற்றுமைகள் உள்ளனவென்றாலும் சில பதிகங்கள் அழிந்து போயினவென்பது துணிபு. அவ்வழிந்த பதிகங்களில் இப்பதிப் பதிகம் இருந்திருக்க வேண்டுமென்ற ஐயத்திற்குச் சில சான்றுகளுண்டு. நாவரசர் நாவலூரை வைப்புத் தலமாகத் திருப்பூவனூர் திருக்குறுந் தொகை 8-ம் பாட்டில் அருளியுள்ளார்.

“ பூவனூர் தண்புறம் பயம் பூம்பொழில்
நாவலூர் நள்ளாறொடு நன்னிலங்
கோவலூர் குடவாயில் கொடிமுடி
மூவலூரு முக்கண்ணனூர் காண்மினே ”

இப்பதிக்கு அப்பர் வர அமயமிருந்தது சேக்கிழார் கூற்றால் தெரிகிறது. அப்பர் அதிகையில் சைவசமயம் புகுந்து, சமணர் இழைத்ததீங்குகளில் தப்பி, பின் திருவதிகைப் போந்து, சிலநாள் தங்கி, பல தலங்கள் தரிசிக்க விழைந்து புறப்படுகிறார்.

“ இந்நாளிற் றிருப்பணிகள்
செய்கின்ற விறற்றமிழ்க்கு
மன்னனை வாகீசத்
திருமுனிவு மதிச்சடைமேற்
பன்னகை மணிந்தவர்தம்
பதிபலவும் சென்றிறைஞ்சிச்
சொன்னமைத் தமிழ்புனைந்து [வார்”
தொண்டுசெய்வான் றொடர்ந்தெழு

“ திருவதிகைப் பதிமருங்கு
திருவெண்ணெய் நல்லூரு
மருளுதிரு வாமாத்தூர்
திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும்
வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார்
மகிழ்பெண்ணை கடமணைந்தார் ”

(நாவு—புராண—147-148.)

148-ல் கூறப்பட்ட வெண்ணெய் நல்லூருக்கு அரசர் பதிகம் கிடைத்தில. ஆனால் வைப்புத் தலமாகப் பல முறை பாடியுள்ளார். ‘ மருவுதிருப் பதி பிறவும் வணங்கி வளத் தமிழ் பாடி ’ என்றதால் நாவலூரை நாவரசர் வணங்கிப் பாடினரென்பது நிலப்படம் காணின் ஐயம் தருகிறது. 148-ல் பகர்ந்த பதிகள் அற்றைநாளில் பிரபல பதிகள்போலும். நாவலூர் ஒரு சிறு ஊர்போலும். நாவலூர் பெயருடைய தலம் வேறு உண்டோ இல்லையோ யாமறிகிலம். மேற்காட்டிய குறுந்தொகையில் நாவலூரொடு கோவலூரும் இருப்பதால் நம்பி பிறந்த நாவலூரே சுட்டப்பட்டதென்பது உளநூல் வழிநோக்கின் தெளிவு. அரசரது இத்தலப்பதிகம் எவ்வாறாயினும் ஆறும் நூற்றாண்டில் நாவலூர் ஒரு பதியாக எண்ணப்பட்டதை அவரது குறுந்தொகை அறிவுறுத்துகிறது.

சுந்தரர் காலத்தில் இந்நிலம் காசினிக்குக் காசி போல்வது. இதனைச் சுந்தரர் தமது ஊராகக் கூறுதல் காண்க.

“நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரை
ஆதரித் தீசனுக் காட்செயு மூர்” [யன்

பின்னும் ‘அரனடியே யடைந்திட்ட சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர் கோன்’ என்று திருத்தொண்டத் தொகையில் கூறுதல் சிந்திக்கற்பாலது. இத்தலம் நான்கு நாயன்மாருக் குரியதாக விளங்குகிறது. நாவரசர் பதிகம்போல் சுந்தரர் பதிகம் ஒன்றோ பலவோ மறைந்து போயிற்றென்பது தெரிகிறது. இதுகாலை கிடைத்தது “கோவல நான்முகன்” பதிகம் ஒன்றே. சுந்தரர் நாவலூருக்கு வெண்ணெய்நல்லூரில் தடுத்தாட் கொள்ளப்பட்டவுடனும்,

“ நாவலர் கோனாரூரன்
றனைவெண்ணெய் நல்லூரின்
மேவுமருட் டுறையமர்ந்த
வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத்
திருநாவலூர் புகுந்து
தேவர்பிரான் றனைப்பணிந்து
திருப்பதிகம் பாடினார் ”

(தடுத்—78.)

சிதம்பரம் வணங்கி, ஆரூர் அணுகிப் பரவையை மணந்து, முதுகுன்றம் போந்து, பொன்னைக் குளத்திலிட்டுப் பின்னும் ஆரூர் அடைந்து, பொன்னை எடுத்த பிறகும் நாவலூர் போந்தார்.

“ திருத்தினைமா நகர்மேவுஞ்
சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனார் அமர்ந்தருளும்
நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர்
போற்று திருநாவலூர்
கருத்தில்வரும் ஆதரவாற்
கைதொழச்சென் றெய்தினார். ”

(ஏயர்கோன் 168.)

இவ்வகை, இரண்டாவது முறைவரும் பொழுது அற்புதங்களால் தாம், தமிழகத்தில் பேரும்புகழும் பெற்றுத் திரும்பியதால், நாவலூரார் தங்கள் ஊர் நம்பியை எதிரிட்டழைத்துச் சிறப்பிக்க, அக்குழாத்துடன் கோயில் புகுந்து இறைவனைக் கோவலனான் முகனெடுத்துப் பாடுகிறார்.

“ திருநாவலூர் மன்னர்
சேர்கின்றா ரெனக்கேட்டுப்
பெருநாமப்பதியோருந்
தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாளென் றலங்கரித்து
வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார்
செழுங்கோயி லுள்ளணைந்தார்”

—169.

“ மேவியவத் தொண்டர்குழாம்
இடைத்தா வென்றெழு மோசை
மூவுலகும் போயொலிப்ப
முதல்வனார் முன்பெய்தி

"வெங்கோல் வேந்தன் றென்னாடு
 மீழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன்
 செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடு
 மணிதில்லை யம்பலத்துள்
எங்கோ னீசனெம் மிறையை
 யென்று கொலெய்துவதே."

இவரது தமையன் அமைத்ததும், சுந்தரர் பிறந்த பண்டைப் பதியுமான நாவலூர் கோயிலுக்குத் திருவிசைப்பா பாடியிருக்கக் கூடுமென்பது, சில திருவிசைப்பாக்கள் ஒழிந்தன என்று கொள்ளின் ஐயத்திற் குரியதன்றோ? மற்றும் சேதிராயர் தாம் பாடியவற்றில் கிடைத்துள்ள ஒரு திருவிசைப்பாவில் 'சேதியர்கோன்' என்றதால் கோவலூர் சிற்றரசரென்பது தேற்றம் இவரும் தம் அண்மையிலிருந்த முதுபதிக்குப் பாடியிருக்கக் கூடுமன்றோ? இறைவன் திருவுளப் பாங்கு ஏதோ? அதனை அறியும் அறிவு அறிகிலம். பின் நாளில் நம்பியாண்டார் நம்பி அந்தாதியில் 'நீர்வயல் நாவற்பதி' யென்றும் சேக்கிழார்,

"அருமறைச் சைவமோங்க
 அருளினா லவதரித்த
மருவிய தவத்தான் மிக்க
 வளம்பதி வாய்மைகுன்றாத்
திருமறை யவர்கள்நீடுந்
 திருநாவ லூராமன்றே"

என்றும் அருளினார்கள்.

இதுவரை காட்டிய சான்றுகளால் நாவரசர்காலம் முதல் நாவலூரைப் பல தொல்லாசிரியர்கள் போற்றிப் பாடியதும், அவ்வசைப்பாடிய பாட்டுக்களில் சில இறந்திருக்கக் கூடுமென்ற ஏதுக்களும் தெரிகின்றன. இதனால் சரித்திர ஆரம்ப காலம் தொட்டு தமிழகத்தில் சிறந்த பதியாக இது விளங்கிய தென்பது போதரும். சோழ அரசன் இவ்விடத்தில் வெற்றி, தலைநகர் இன்ன பிற அரசியல் காரணங்களில்லாது கட்டிய கோயில் உளதெனின் அதன் மாண்பு என்னே? இந்நாவலம் தீவு போற்றும் தீம் திருமுறைகள், திருத்தொண்டர்கள், அவர்கள் வரலாறுகள் இன்ன பிறவும்நம்பி வழி தந்தது நாவலூராகும். சிந்தியுங்கள் அன்பர்களே! சிறப்பாகச் சைவத்திற்கும் பொதுவாகத் தமிழர் சரித்திரத்திற்கும் நாவலூர் நிலைக்களனன்றோ? சைவர்களே! தமிழர்களே! உங்களில் எத்துணைபேர் இவ்வருமைத் தலத்தைக் கண்டீர்கள்? இதோ இத்தலத்தில் உங்கள் நாகரிகம், சமயம், அரசியல் இன்னோரன்ன பிற அரண் செய்யப் பெற்றிருக்கின்றன. உங்கள் முதுமக்கள் மானம், குலம், கல்வி முதலிய பல நலங்களை நல்குவது நாவலூரன்றோ? எழுமின் சைவர்களே! தமிழர்களே! தொழுமின் நாவலூரை. கருதுமின் அதன் காலத்தொடு கற்பனை கடந்த உண்மைச் சரிதம்! 'புகழே விஞ்சு திருநாவலூர்' என்பது உமாபதி திருப்பதிக் கோவை உரை! 'பன்னரிதாம், ஆவலூர் எங்களுடைய ஆரூரன் ஆரூரா, நாவலூர் ஞானி அருள் ஞாபகமே' என்ற வள்ளலார் வாக்கையும் ஓர்க!

"குறிகளும் அடை யாளமுங் கோயிலும்
 நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
 அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
 பொறியி லீர்மன மென்கொல் புகாததே."

18/157

# புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" பைண்டு பிரதி (மலர் ௧, ௨, ௩ தனித்தனி) | 2 | 0 |
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 0 | 12 |
| ஷை (ராப்பர்) ... ... ... | 0 | 10 |
| சுந்தரர் தேவாரம் ராப்பர் ... ... ... | 0 | 4 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ... ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவநூலும் சைவசமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் ... ... | 0 | 2 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... ... | 0 | 2 |
| சைவமும் சுயமரியாதையும் ... ... ... | 0 | 2 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்துப் பிரதிகள்) ... ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| மகிழடிசேவை விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| தேவாரம் விளக்கம் ... ... ஷை ... ... | 0 | 2 |
| சமயகுரவர் சம்பாஷணை ... ஷை ... ... | 0 | 2 |
| சந்தானகுரவர் வரலாறு ... ஷை ... ... | 0 | 2 |
| சைவசமயிகளுக்கு எச்சரிப்பு ஷை ... ... | 0 | 2 |
| கைவல்ய நவநீதம் (மூலமும் உரையும்) ... ... | 1 | 8 |
| சைவசிகாமணிகள் இருவர் ... ... ... | 1 | 0 |
| அன்பர் போற்றிக் கலிவெண்பா ... ... ... | 0 | 8 |
| ஏன் புலால் மறுத்தல் வேண்டும் ... ... ... | 0 | 6 |
| Superiority of Vegetarian Diet (ஆங்கிலத்தில்) ... | 0 | 8 |
| The philosophy of Vegetarianism ( ஷை ) ... | 0 | 1 |
| The Grace of Lord Siva ... ( ஷை ) ... | 0 | 4 |

தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வேறு.

வேண்டுவோர் ரிப்ளை கார்டு மூலம் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-8-1931.

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Registered No. M. 2350.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 8

# தேவாரம் - அடங்கன்முறை

சைவசித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அடங்கன்முறைச் சுத்தப்பதிப்புக்களாகிய சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம் மூன்றும் சேர்ந்தது தேவாரம் - அடங்கன் முறை எனப்படும். இவ்வடங்கன்முறை கீழ்வரும் விலை விகிதப்படி கிடைக்கும்.

| | |
|---|---|
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ)<br>அப்பர் தேவாரம் (கலிக்கோ)<br>சுந்தரர் தேவாரம் (ராப்பர்)<br>இம்மூன்றும் சேர்ந்தது. ரிஜிஸ்தர் தபாற் கூலியுட்பட ரூ. 2 14 0 | சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ)<br>அப்பர் தேவாரம் (ராப்பர்)<br>சுந்தரர் தேவாரம் (ராப்பர்)<br>இம்மூன்றும் சேர்ந்தது. ரிஜிஸ்தர் தபாற் கூலியுட்பட ரூ. 2 11 0 |

இவைகளைப் பெறுவதற்கு மேற்கூறிய தொகையை முன் பணமாக மணியார்டர்மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அடங்கன் முறைப் பிரதிகள் பலவற்றைப் பெறவிரும்புவோர் கடிதமூலம் விலை, பார்சல் செலவு முதலிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சில பிரதிகளே அடங்கன்முறையாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளபடியால் இன்றே வாங்குவதற்கு ஒவ்வொருவரும் முந்துக.

## சம்பந்தர் தேவாரம்

**ரிஜிஸ்தர் தபாற்கூலியுட்பட கலிகோ பிரதி ஒன்றின் விலை ரூபா 1—8—0.**

வேண்டுவோர் முன்பணம் அனுப்பவேண்டும்.

**பத்துப்பிரதிகள் வாங்குவோருக்கு ஒருபிரதி இனாமாகத் தரப்படும்.**

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—8—1931

இங்ஙனம்,
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

## சுந்தரர் திருநாள்

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் "குகானந்த நிலயத்"தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரம் நம் சமாஜத்தினரால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்திருநக்ஷத்திரத்தன்று (22-7-1931) மாலை 6½ மணிக்கு சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் "பொய்யாத் தமிழூரன்" என்பதுபற்றி ஏறக்குறைய இரண்டு மணிநேரம் வரை மிக விரிவாகவும் ஆராய்ச்சிப் பொருள்களைச் செவ்வனே விளக்கியும் பேசினார்கள். பொய்யா என்ற அடைமொழியின் சிறப்பையும் உண்மையையும் தக்க சான்றுகளுடன் விளக்கினார்கள். தலைவர் முடிபுரை, நன்றிகூறல், கடவுள் வாழ்த்து முதலியன நிகழ்ந்த பின் சபை கலைந்தது.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.